மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): புளியங்குடி அரசு மருந்தகத்திற்கு ரூபாய் மூன்று இலட்சம் செலவில் கட்டிடங்கள் கட்ட 1985–86 ஆம் ஆண்டிற்கான திட்டப்பணியாக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. கட்டிடப் பணிகள் பொதுப்பணித் துறையினரால் விரைவில் மேற்கொள்ளப்படும்.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிட வேலைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நன்றி. இந்தப் புளியங்குடி சுமார் 50 ஆயிரம் மக்கள், அதாவது ஜனத்தொகை கொண்ட இடம். எனவே, அங்கே 50 படுக்கைகள், ரத்தப் பரிசோதனை நிலையம், எக்ஸ்ரே பிரிவு, பிரசவ வசதிக்குரிய ஏற்பாடுகளைச் செய்யும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற ஆரம்பச் சுகாதார நிலையங்களை விரிவுபடுத்தும்போது, இதுவும் கவனிக்கப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடியில் அரசு மருத்துவமனை ஆரம்பித்தல்.

110—(*வினா எண். 4305)—திரு. அ. பிரணவநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடியில் அரசு மருத்துவமனை துவங்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

குளத்தூர் தொகுதி, பேராம்பூரில் புதிய சித்த மருத்துவமனை.

111—(*வினா எண். 10654)—திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி பேராம்பூர் கிராமத்தில் ஒரு சித்த மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இல்லை.

1987 மார்ச் 11]

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கொளத்தூர் தொகுதியில் உள்ள பேராம்பூர் கிராமம் பகுதியிலே பஸ் வசதியோ அல்லது மருத்துவ வசதியோ கிடையாது. அந்தப் பேராம்பூர் கிராமத்திலிருந்து வைத்திய வசதிக்கு செல்லவேண்டும் என்றால், அதிக தூரம் செல்ல வேண்டும். ஏறக்குறைய 20 மைல் சுற்றளவிலே எந்த வைத்திய வசதியும் செய்யக்கூடிய அளவிற்கு அரசு மருத்துவமனை இல்லை. எனவே, அந்தப் பேராம்பூர் கிராமத்தில் ஒரு சித்த மருத்துவ மனையையாவது அமைக்க அரசு முன்வருமா? அப்படி இல்லை என்றால், விராலிமலையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்திவிட்டு, பேராம்பூரிலே ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார கிளை நிலையங்களைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன். சித்த மருத்துவ மனையைப்பற்றி தற்போது இல்லை என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதித் தந்தால் அரசு அதைப் பரிசீலிக்கும்.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையில் இருக்கிற அரசு பொது மருத்துவ மனையிலிருந்து பேராம்பூர் கிராமத்திலே ஒரு சித்த மருத்துவ மனை அமைக்க வழிமுறைகள் இருப்பதாகவும் அரசுக்கு எழுதியிருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை ஏற்றுக் கொண்டு மேலும் பேராம்பூர் எனது சொந்த ஊர் என்பதால் அருள்கூர்ந்து இந்த சித்த மருத்துவமனையை விரைவிலே ஆரம்பிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய சொந்த ஊர் என்ற காரணத்திற்காக அல்ல. பொதுமக்கள் நன்மைக்காக தேவைப் படுமானால் அதைப் பற்றி எழுதிக் கொடுப்பார்களானால், அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

போக்குவரத்துக்கழக பேருந்துகளில் டைசிகான் கருவி.

112—(*வினா எண். 5688)—திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின்போக்குவரத்துக் கார்ப்பரேஷன் பேருந்துகளில் எத்தனைப் பேருந்துகளில் டைசிகான் (Dysicon) கருவிகள் பொருத்தப்பட்டன ?

(ஆ) அதற்கு ஆன செலவு என்ன ?